| | | |
|---|---|---|
| O.S No. | : | 253/2019 |
| DATE | : | 24.07.2025 |
| NAME | : | விஜயகுமாரி |
| Husband's Name | : | பிரபாகரன் |

**பிரதிவாதி தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

16. தாவா சொத்தின் ஒரு பகுதி சுவாமிநாத முதலியாருக்கு சொந்தமானது என்று சொன்னால் சரிதான். 09.05.2008ல் எனது கணவருக்கு எனது மாமனார் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் சாட்சியிடம் அந்த ஆவணம் காட்டடப்பட்டது, அதில் திண்ணை பகுதி என்று ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் இருக்கும் சொத்து விவரத்திற்கு தான் நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை அளந்து பார்க்க சட்டப்படி ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது.

17. தற்போது நான் கோரும் சொத்தின் பட்டா யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. B அட்டவணை சொத்தை பொறுத்தவரை பட்டா பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சர்வே எண் எனக்கு தெரியாது. பொது சந்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 2007ல் பிரதிவாதி தனது சொத்தை கிரையம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியும். அந்த கிரைய ஆவணத்தை வாங்கி நான் படித்து பார்க்கவில்லை. பிரதிவாதி தனது சொத்தின் ஒரு பகுதியை குப்பம்மாளிடம் இருந்தும் மற்றொரு பகுதியை எனது மாமனாரிடம் இருந்து வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியும். குப்பம்மாளிடம் இருந்து வாங்கிய பகுதியை தான் பிரதிவாதி கட்டிடம் கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்து பிரதிவாதி கிரையம் வாங்கியதில் இருந்து அவரது அனுபவித்தில் தான்

இருந்து வருகிறது, ஒருபோதும் நாங்கள் அனுபவிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

18. தாவா B அட்டவணை சொத்தில் திண்ணை இல்லை என்று நான் சொல்வது பொய், ஆதியில் இருந்தே திண்ணை பொதுவான அனுபவித்தில் இருந்து வந்தது என்று சொன்னால் சரியல்ல. அந்த திண்ணையின் ஒரு பகுதி உரிமை நடேச ஐயருக்கும் மற்றொரு பகுதி குப்பம்மாளுக்கும் சொந்தமானது எனது மாமனாருக்கு அந்த திண்ணையில் எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நான் கோருவது போல எனது மாமனாருக்கு B அட்டவணை சொத்தில் உரிமை இருந்திருந்தால் எனது கணவருக்கு அதனை குறிப்பாக எழுதி கொடுத்திருப்பார் என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்தை தவிர்த்து A அட்டவணை சொத்தை தான் எழுதி கொடுத்தார் அது முழுமையாக எங்களது அனுபவித்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல.

19. B அட்டவணை சொத்து எங்களுடையது என்று இருந்திருந்தால் முறையாக வழக்கறிஞர் ஆணையர் மூலம் சொத்தை அளந்து பார்த்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. எங்களுக்கு சொந்தமான 788 ½ சதுரடி நிலத்தில் எனது மாமனார் உயிருடம் இருக்கும் காலத்திலேயே கட்டிடம் கட்டிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அசல் வழக்கு எண் 150/2018யை எனது கணவர் தாக்கல் செய்தார் அந்த வழக்கில் இவ்வழக்கின் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் சரிதான். ஆகவே வா.சா.ஆ.5ல் இருக்கும் தீர்ப்பிற்கும் இந்த பிரதிவாதிக்கும் சம்மந்தம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

20. வா.சா.ஆ.6 ஆவணம் வாதி கெஜலட்சுமிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு என்றால் சரிதான். அதற்கு அவர் அனுப்பிய பதில் அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்திருப்போமா என்றால் தாக்கல் செய்திருப்போம். வா.சா.ஆ.7 மாதிரி வரைபடத்தில் உண்மையாகவே பிரதிவாதி ஆக்கிரமிப்பு

செய்திருந்தால் முறையான அளவீடுகளோடு வரைபடம் தாக்கல் செய்திருப்போம் என்று சொன்னால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள வரைபடத்தில் A அட்டவணை மற்றும் B அட்டவணை சொத்துக்களை குறிப்பிட்டு காட்டவில்லை என்ற சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணமானது எனது கணவருக்கு எனது மாமனார் எழுதி கொடுத்த சொத்துக்கானது அதற்கும் B அட்டவணை சொத்திற்கும் சம்மந்தம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல.

20. B அட்டவணை சொத்தானது A அட்டவணை சொத்தின் ஒரு பகுதி என்று எனது வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். B அட்டவணை சொத்திற்கு மட்டும் தான் விளம்புகை மற்றும் சுவாதீனத்தை திருப்பி கோரி பரிகாரம் கேட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கிற்கு செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறு என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்திற்கு பிரதிவாதி முறையாக பட்டா பெற்று கட்டிடம் கட்டியதால் அதை தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. B அட்டவணை சொத்தை பொறுத்த வரை நான் எந்த பரிகாரமும் கேட்க முடியாது அதன் உரிமையாளர் பிரதிவாதி தான் என்று சொன்னால் சரியல்ல.

21. B அட்டவணை சொத்து எங்களுக்கு உரிமையானது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக் கொள்ளப்படுகிறது.**

(S/d.Fanny Rajan)
Principal District Munsif,
Kancheepuram.